**செய்தி வெளியீடு எண்: 260** **நாள்: 09.05.2013**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை இன்று (9.5.2013) தலைமைச் செயலகத்தில், தமிழகத்தில் வறட்சியால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாக ஆய்வு செய்த மத்திய அரசின் நிபுணர் குழுவின் தலைவர் திரு. பிரவேஷ் சர்மா மற்றும் குழுவின் உறுப்பினர்கள் சந்தித்தனர்.

இந்த சந்திப்பின் போது இந்தக் குழுவின் தலைவர், மத்திய அரசின் வறட்சி நிவாரண ஆய்வுக் குழுவின் ஐந்து உறுப்பினர்கள் டெல்டா மாவட்டங்களுக்கும், ஐந்து உறுப்பினர்கள் டெல்டா அல்லாத ஐந்து தென் மாவட்டங்களுக்குச் சென்று மூன்று நாட்கள் ஆய்வு மேற்கொண்டதாகவும், ஆய்வின் போது, மாநில அரசு எடுத்த முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் காரணமாக வறட்சியை சந்திக்கக் கூடிய நிலையில் மக்கள் தயார்படுத்தப்பட்டுள்ளது குறித்தும், மக்களின் துயர்த் துடைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் குழுவின் பாராட்டுதல்களைத் தெரிவித்தார். இது போன்று, வேறு எந்த மாநிலத்திலும் செய்யப்படவில்லை என்ற தங்களது கருத்துகளையும் எடுத்து உரைத்தார்.

மேலும், தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான தமிழக அரசின் பொறுப்புணர்ச்சியும் இதிலிருந்து தெரிய வந்தது என்றும் தெரிவித்தார்.

கிராம அளவில் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், அதாவது ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், பொது விநியோகத் திட்டம், சுகாதார வசதிகள் ஆகியவை முறையாக தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வருவதும், வறட்சி காரணமாக இடம் பெயர்தல் என்ற நிலையே இல்லை என்றும் ஆய்வில் தெரிய வந்துள்ளது என்றும், வறட்சி காரணமாக தமிழக அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், கூட்டுறவு வங்கிகள் மூலம் பயிர்க்கடன் வழங்கியது, கூட்டுறவு வங்கிக் கடன்களை திருத்தி அமைத்தல், மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் ஆகியவை பாராட்டுக்குரியவை என்றும் தெரிவித்தார்.

இதற்கு நன்றி தெரிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மாநில அரசின் நிதி ஆதாரங்களுக்குட்பட்டு, மாநில அரசால் எடுக்கக் கூடிய அனைத்து நடவடிக்கைகளும் மாநில அரசு மேற்கொண்டுள்ளதாகவும், தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சியை சமாளிக்க மாநில அரசு வறட்சி மனுவில் (Drought Memorandum) கோரியுள்ள 19,665 கோடி ரூபாய் நிதி உதவியை வழங்க மத்திய அரசு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தெரிவித்த கருத்துகளைத் தாங்கள் மத்திய அரசுக்கு விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கையில் பரிந்துரை செய்வாதாக குழுத் தலைவர் உறுதியளித்தார்.

இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு நிதி அமைச்சர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், நிதித் துறை முதன்மைச் செயலாளர், வருவாய்த் துறை முதன்மைச் செயலாளர், கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் அரசுத் துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

********

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9
நாள்: 9.5.2013